ANNEXURE 3 - PART 2 (18)

# ஐக்கிய ஜனநாயகக் குரலினது யாப்பு

1. அத்தியாயம் 01: கட்சியின் உத்தியோகபூர்வ பெயர், முகவரி, சின்னம் மற்றும் நிறம்

1.1

சிங்களத்தில்: එක්සත් ප්‍රජාතන්ත්‍රවාදී හඬ

தமிழில் : ஐக்கிய ஜனநாயகக் குரல்

ஆங்கிலத்தில்: United Democratic Voice

1.2. கட்சி பிரகடணப்படுத்தப்பட்ட திகதி: 01 ஜூன் 2005

1.3. அலுவலக முகவரி: இல: 20, Dr. என். எம். பெரேரா மாவத்த, கொழும்பு 08

1.4. கட்சியின் சின்னம்: மைக்ரோபோன்

1.5. கட்சியின் நிறங்கள்: நீலம் மற்றும் மஞ்சள்

24 DEC 2025

அத்தியாயம் 02: கட்சியின் நோக்கங்கள.

2.1.இலங்கை மக்களுக்கு நேர்மையானதும், தூய்மையானதுமான அரசியலை உருவாக்குவதற்கும், அரசியல் சேவையை வழங்குவதற்கும் வழிகாட்டுதல். இந்த நோக்கத்தை அடையும் பொருட்டு, ஒவ்வொரு தேர்தலிலும் போட்டியிட ஜனநாயக முறையின் மூலம் வேட்பாளர் அல்லது வேட்பாளர்களை நியமித்தல்.

2.2. ஜனநாயக அரசியல் நடவடிக்கைகள் மூலம் வேகமான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தை மையமாகக் கொண்ட சமூக நிலை, நல்வாழ்வு மற்றும் பொருளாதார கொள்கைகளை மேம்படுத்துதல்.

2.3அடிப்படை மனித உரிமைகளை பாதுகாக்கவும் நிலைநாட்டவும், அவை பாதுகாக்கப்படுவதற்கு குரலாக இருப்தையும் உறுதிப்படுத்துதல்.

2.அத்தியாயம் 03: குறிக்கோள்கள்

3.1. இலங்கையின் ஜனநாயக அமைப்பின் மூலம் நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை பாதுகாப்பது.

3.2. மொழி, மதம், இனம் அல்லது சாதி என்பவற்றைப் பொருட்படுத்தாமல் அனைத்து இலங்கையர்களின் சமத்துவத்தை பாதுகாக்கவும் மரியாதை செய்யவும்.

3.3. அனைத்து சமூகங்களுக்கும் மாகாண சபை முறையின் மூலம் அதிகாரப் பங்கீட்டை ஊக்குவித்து, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மக்களுக்கு மேம்பட்ட சேவையை வழங்குவதை இலங்கை அரசியல் அமைப்பின் மூலம் நிலைநாட்டுதல்.

3.4. பொருளாதார திட்டம்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator

24 DEC 2025

3.4.1. இலங்கையை ஒரு வலுவான மேல் நடுத்தர வருமான நாடாக உருவாகும் வகையில் அதிவேக வளர்ச்சியையம், பல்துறை முன்னேற்றத்தையும் மையமாகக் கொண்ட பொருளாதார கொள்கையை மேம்படுத்துதல்.

3.4.2. நிதி பாதுகாப்பும் பொறுப்பும் இணைந்த கட்டாயமான சட்டப் பொறுப்பாக மாற்றுதல். இதனால் இலங்கை் பொருளாதார நெருக்கடி மற்றும் அதிக பணவீக்கம் மீண்டும் ஒருபோதும் ஏற்படாதது

3.4.3. உள்நாட்டு வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்கும் வகையில், உற்பத்தித் துறைகளில் தொழிலாளர்-ஊக்குவிப்பு, ஏற்றுமதி நோக்கமுடைய பிரிவுகளை மையமாகக் கொண்ட உற்பத்திமுறைமைகளை முன்னெடுத்துச் செல்லுதல்.

3.4.4. இளைஞர்களும் பெண்களும் தொழில் முனைவுத்திறனை வளர்த்தெடுக்க தேவையான வளங்களை ஒதுக்கி, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் திட்டங்களை வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தி, தேசிய Startup incubator ஒன்றை உருவாக்குதல்.

3.4.5. தொழிற்கல்வி பயிற்சித் திட்டங்களும் தொழில்–பல்கலைக்கழக கூட்டமைப்பின் மூலம் திறன்கொண்டவர்களுக்கும் திறன் குறைத்தவர்களுக்குமான, தொழில்சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்தல், மேலும் மாறும் பொருளாதார போக்குகள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்றவாறு தொழிலாளர்களை மேம்படுத்தவும் மறுபயிற்சி அளிக்கவும் வாழ்நாள் கற்றல் முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குதல்.

4.அதிகாரம் 04: கட்சியின் நிர்வாக அமைப்பு

கட்சியின் நிர்வாகம் பின்வரும் அமைப்புகளைக் கொண்டுள்ளது:-

4.1. பதவியாளர் கவுன்சில்

4.1.1. கட்சியின் மொத்த நிர்வாக பொறுப்பு கொண்ட பதவியாளர் கவுன்சில் ஒன்று அமைக்கப்படும்.

4.1.2. கட்சியின் தேவைகளுக்கிணங்க, பதவியாளர் கவுன்சில் அவ்வப்போது கட்சியின் அமைப்பில் மாற்றங்களை செய்யவும், பிற குழுக்கள் அல்லது பிரிவுகளை உருவாக்கவும் அதிகாரம் கொண்டிருக்கும்.

4.1.3. கட்சியின் அமைப்பில் மேற்கொள்ளப்படும் எந்த மாற்றங்களும், கட்சின் யாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்யாது அமலுக்கு வரும்

4.1.4. கட்சியின் பதவியாளர் கவுன்சில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்:

1. தலைவர்
2. பொதுச் செயலாளர்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. * Sworn Translator *

24 DEC 2025

3. பொருளாளர்
4. தலைமையதிகாரி
5. துணைத் தலைமையதிகாரி
6. நான்கு பிரதித் தலைவர்கள்
7. நான்கு உதவி தலைவர்கள்
8. ஊடகச் செயலாளர்
9. உதவிச் செயலாளர்
10. உதவி பொருளாளர்
11. கொள்கை பரபபுச் செயலாளர்
12.தேசிய அமைப்பாளர்
13. பிரதி தேசிய அமைப்பாளர்
14. தேசிய இளைஞர் அமைப்பாளர்
15.பெண்கள் விவகார ஒருங்கிணைப்பாளர்
16.பெண்கள் விவகார உதவி ஒருங்கிணைப்பாளர்
17. மூன்று கவுன்சில் உறுப்பினர்கள் வரை

4.2. முதலாவது நிர்வாக குழுவின் உறுப்பினர்களுக்கான தேர்தல்

4.2.1. இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதன் பின்பு, கட்சியின் முதல் பொதுச் செயலாளராக ஜி.டி.ஜெயசீலன் நியமிக்கப்படுவார். அவருடைய பதவி இங்கு குறிப்பிடப்பட்டுள்ளபடி வெற்றிடமாகும் வரை அவர் பதவி வகிப்பார்.

4.3. பதவியாளர் சபை கூட்டங்கள

4.3.1. பதவியாளர் சபையின் கூட்டங்கள் தேவைக்கேற்ப நடைபெறும் மற்றும்

பொதுச்செயலாளர் மூலம் அழைக்கப்படும்

4.3.2. பொதுச் செயலாளர் எப்போதாவது தேவைக்கேற்ப சிறப்பு அல்லது அவசர கூட்டங்களை சபை கூட்டலாம்.

4.3.3. பதவியாளர் சபை கூட்டம் அல்லது ஏதேனும் பிற கூட்டங்கள் டிஜிட்டல் தளம் அல்லது பிற ஒன்லைன் தளங்களின் மூலம் நடத்தப்படலாம், மேலும் வாக்குரிமையினை அத்தகைய தளங்களின் மூலமாகவே அல்லது சுழற்சி முறையில், அங்கு உறுப்பினர்கள் தங்களது விருப்பத்தின் கீழ் கையொப்பம் இட வேண்டியிருக்கும்.

4.4. ஆண்டுப் பொதுக்கூட்டம், கூட்டங்கள், அவசர கூட்டங்கள் மற்றும் சிறப்பு கூட்டங்கள்.

4.4.1. கட்சியின் ஆண்டு பொதுக்கூட்டம் பொதுச் செயலாளர் தீர்மானிக்கும் திகதியில், இலங்கையின் ஏதேனும் ஒரு பகுதியிலில், ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும். ஏதேனும் தடங்கல் ஏற்பட்டால், ஆண்டு பொதுக்கூட்டத்தினை மேலும் ஒரு ஆண்டிற்கு பிற்போடலாம்.

4.4.2. தேவைக்கேற்ப பொதுச் செயலாளர் எப்போதும் கூட்டத்தை அழைக்கலாம்.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY.)
408/B, Maradana Road, Colombo - 10.
Sworn Translator
24 DEC 2025

4.4.3. பதவியாளர் கவுன்சிலின் சிறப்பு கூட்டம் 3–4 மாதங்களுக்கு ஒருமுறை, தேவையானால், குறைந்தது பத்து பதவியாளர் கவுன்சில் உறுப்பினர்கள் பொதுச் செயலாளருக்கு அனுப்பும் வேண்டுகோள் அறிவிப்பின் பிரகாரம் நடத்தப்படும். பிற கூட்டங்களும் இதே முறையில் அழைக்கப்படும்.இக்கூட்டங்களுக்கான அறிவிப்பு பொதுச் செயலாளரால் கடிதம் அல்லது பிற மின்னணு தகவல் தொடர்பு மூலம்— உதாரணமாக SMS அல்லது WhatsApp மூலம் கூட்டம் அறிவிக்கப்படலாம், இவ்வறிவிப்புகள் ஐந்து நாட்களுக்கு முன்பு அனுப்பப்படும். எதிர்பாராத சூழ்நிலைகளில், அனைத்து கூட்டங்களும், அதில் பொதுக்கூட்டம், சிறப்பு கூட்டம் மற்றும் அவசர கூட்டம் ஆகியவை ZOOM- Vedio Call வீடியோ அழைப்பு அல்லது இதற்கு ஒப்பான மின்னணு முறைகளின் மூலம் நடத்தப்படலாம். ஒரு உறுப்பினருக்கு அறிவிப்பை தவறுதலாக அனுப்பாதிருந்தாலும், அதன் காரணமாக கூட்டத்தின் நடைமுறைகள் வலுவற்றதாகாது.

4.4.4. அலுவலர் சபையின் எந்தவொரு அலுவலையும் நடத்துவதற்காக நடைபெறும் கூட்டத்திற்கு, மொத்த உறுப்பினர்களின் 50%-க்கும் குறைவாக பங்குபற்றும் கூட்டங்கள் செல்லுபடியாகாது.

4.4.5. அலுவலர் சபை உறுப்பினர்கள், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்கள் எழுத்து மூலம் முன் அறிவிப்பு இன்றி வருடாந்த கூட்டத்தில் பங்கேற்க தவறினால், அவர்கள் தங்களுடைய பதவியிலிருந்து தாமாகவே விலகியவர்களாக கருதப்படுவார்கள். இருப்பினும், அவர் சுயமாக் இராஜினாமா செய்யாதவரையும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படாதவரையும் கட்சி உறுப்பினராகத் தொடர்ந்து செயற்படுவார். இத்தகைய நபர் கூட்டம் நடைபெற்ற தினத்திலிருந்து 21 நாட்களுக்குள் கட்சி தலைவருக்கும் செயலாளருக்கும் எழுத்து மூலம் மேல்முறையீடு செய்யும் உரிமையுடையவர். அத்தகைய சந்தர்ப்பத்தில், அவர் பொறுப்பேற்கும் பதவி, பொதுச் செயலாளரை உட்பட அலுவலர் சபையின் மொத்த உறுப்பினர்களில் 50%-க்கும் மேற்பட்டோரின் ஆதரவைப் பெற்றால், அது அவருக்குக் கிடைக்கும்.

4.4.6.அலுவலர் சபையின் வாக்குகள், அலுவலர் சபையின் அனைத்து உறுப்பினர்களின் வாக்குகளையும் உள்ளடக்கியதாகும். உறுப்பினர்கள் கூட்டத்தில் இல்லாதபட்சத்தில், அவர்களின் வாக்குகள்/ஒப்புதல் சுற்றறிக்கையின் மூலம் பெறப்பட வேண்டும், மேலும் அவர்கள் அளிக்கும் விருப்பத் தெரிவுகள், அந்தந்த உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

4.5. அலுவலர் சபையின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்

4.5.1.கட்சியின் எந்த உறுப்பினருக்கும் (அலுவலர் சபை உறுப்பினர்களையும் உள்ளடக்கி) ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், முடிவெடுக்கும் அதிகாரமும், கட்சி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதிகாரமும், பிற அனைத்து அதிகாரங்களும் அலுவலர் சபையிடம் உள்ளது.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

4.5.2. இங்கு வேறுவிதமாக குறிப்பிடப்படாவிட்டால், அலுவலர் சபையின் அனைத்து முடிவுகளும், கூட்டத்தில் இல்லாதவர்களையும் உள்ளடக்கி, அலுவலர் சபையின் மொத்த உறுப்பினர்களில் 50%-க்கும் மேற்பட்டோரின் ஒப்புதலுடன் எடுக்கப்பட வேண்டும்.

4.6. தலைவரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

4.6.1. கட்சியின் கொள்கைகளைப் பொதுமக்களுக்கு பரப்புதல், கட்சியின் செயல்பாடுகள் மூலம் உறுப்பினர்கள் கட்சியில் சேரும் வகையில் ஊக்குவித்தல், மற்றும் இந்த நோக்கங்களுக்காக தியாக மனப்பான்மையுடன் செயல்படுதல்.

4.6.2.பொதுச் செயலாளரின் ஒப்புதலுடன் ஊடக கேள்விகளுக்கு பொறுப்புடன் பதிலளித்தல்.

4.6.3. தலைவர் இல்லாதபட்சத்தில், பொதுச் செயலாளர் தற்காலிகமாக தலைவரின் பொறுப்புகளை நிறைவேற்றுவார்.

4.7. பொதுச் செயலாளரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்

4.7.1. கட்சியின் நடவடிக்கைகளை நடத்துவதற்கான முழுமையான நிர்வாக அதிகாரம் பொதுச் செயலாளருக்குக் கிடைக்கிறது. இதில், கட்சிக் கூட்டங்களை அழைப்பது, கூட்டங்களுக்கு தலைமை தாங்குவது, நிர்வாகம் மற்றும் கட்சிச் செயல்பாடுகளுக்கான எழுதப்பட்ட ஆவணங்களை சேகரித்தல், கட்சியின் சார்பில் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதல், மற்றும் தேர்தல்கள் ஆணையத்துடன் தொடர்பு கொள்ளுதல்.

4.7.2. பொது செயலாளர் கட்சியின் அலுவலகத்தின் முழுமையான கட்டுப்பாட்டையும் பெற்றிருப்பார்.

4.7.3. பொது செயலாளர் பதவி காலியாகினாலும் அல்லது அவர்/அவள் கடமைகளை நிறைவேற்ற முடியாத சூழ்நிலையில், கட்சியின் பொறுப்பாளர்கள் கவுன்சிலில் உள்ள உறுப்பினர்களில் ஒருவரை பதில் பொது செயலாளராக நியமித்து, பொது செயலாளரின் கடமைகளை நிறைவேற்றச் செய்ய வேண்டும்.

4.7.4. பொறுப்பாளர்கள் கவுன்சில் பொது செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் வரை உதவி செயலாளர் தற்காலிகமாக பொது செயலாளரின் அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் அத்தகைய சூழ்நிலையில் அதிகாரம் 9 இன் விதிகள் தேவையான மாற்றங்களுடன் பொருந்தும்.

4.8. பொருளாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

4.8.1. பொருளாளர் கட்சியின் மூலதனம், நிதி மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு பொறுப்பானவர் அத்தோடு வருமானம் மற்றும் செலவினங்களின் பதிவுகளை கவனமாக பராமரிக்க வேண்டும்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator

24 DEC 2025

4.8.2. ஆண்டுக் கணக்கறிக்கை ஆண்டு பொதுக்கூட்டத்தில் முன்வைப்பதற்கு 14 நாட்களுக்கு முன்பு, பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதி, வசூல்கள் கணக்காளரிடம் பொருளாளர் சமர்ப்பிக்க வேண்டும்

4.8.3. ஆண்டு கணக்கறிக்கை பெப்ரவரி மாத முடிவிற்கு முன், செயலாளர் மூலம் தேர்தல் ஆணையருக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

4.8.4. செலவினங்களுக்கு பொது செயலாளரிடம் முன் அனுமதி பெறப்படுவதை பொருளாளர் உறுதி செய்ய வேண்டும்.

4.8.5. பொருளாளர் இல்லாதபட்சத்தில், உதவி பொருளாளர் பொது செயலாளர் வழங்கும் வழிகாட்டுதலின் கீழ் பொருளாளரின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

4.9. தலைமையதிகாரியின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

4.9.1. பொது செயலாளர் ஏதேனும் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலையில், அவரின் தெளிவான அங்கீகாரத்தின் படி தலைவரே அந்தக் கூட்டத்தில் அவருக்குப் பதிலாகப் பங்கேற்பார்.

4.9.2. எந்த முடிவையும் எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், தலைவர் முதலில் பொது செயலாளரின் எழுத்து மூலமான சம்மதத்தைப் பெற்று, அதன்பின்னர் முடிவை அறிவிக்க வேண்டும்.

4.9.3. பொது செயலாளருக்குப் பதிலாகக் கூட்டத்தில் பங்கேற்கும் தலைவர், பொது செயலாளர் எழுத்து மூலம் வழங்கும் அதிகார பத்திரத்தின் படி மட்டுமே அவரின் வாக்கினை செலுத்த வேண்டும்.

4.10. துணைத் தலைவர், தலைவரின் கடமைகளில் அவருக்கு உதவுவார்.

4.11. துணைத் தலைவர்கள் தலைவருடன் இணைந்து செயல்பட வேண்டும். பொது செயலாளர் அல்லது தலைவர் கூட்டங்களை நடத்த முடியாத சூழலில், பொது செயலாளரின் எழுத்து அனுமதியுடன் துணைத் தலைவர்களில் ஒருவர் கூட்டங்களை நடத்த வேண்டும். துணைத் தலைவர்கள் கட்சியின் கொள்கைகளைப் பரப்புவதற்கும், கட்சியின் செயல்பாடுகளை ஊக்குவிப்பதற்கும் பொறுப்பானவர்கள் இதன் மூலம் உறுப்பினர்கள் கட்சியில் இணைவதை ஊக்குவிக்கலாம். துணைத் தலைவர்கள் கட்சியின் தலைவரும் பொதுச் செயலாளரும் எடுத்த தீர்மானங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு முரணாக இல்லாத வகையில் அவர்கள் நடக்க வேண்டும்.

4.12. உதவி தலைவர்கள், கட்சித் தலைவருடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் மேலும் தலைவரின் மற்றும் பொதுச் செயலாளரின் அனுமதியுடன் தலைவரின் பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

4.13. ஊடகச் செயலாளர் கட்சியின் ஊடகப் பேச்சாளராகச் செயல்பட வேண்டும் மற்றும் தலைவரின் அல்லது செயலாளரின் அனுமதியுடன் கட்சியின் அறிக்கைகளை ஊடகங்களுக்கு வெளியிடலாம்.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (Cey)
408/B, Maradana Road, Colombo - 10.
Sworn Translator
24 DEC 2025

4.14. உதவி செயலாளர் கூட்டங்களை அழைப்பது, கூட்டங்களுக்கான பொறுப்புகளில் செயலாளருக்கு உதவுவது, ஆண்டு அறிக்கைகள் தயாரிப்பது, அனைத்து கடிதங்களையும் தயாரித்து பொதுச் செயலாளரின் அனுமதியுடன் அவற்றை விநியோகிப்பது, மேலும் தேர்தல் தொடர்பான விஷயங்களில் செயலாளருடன் இணைந்து செயல்படுவது ஆகிய பணிகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

4.15. உதவி பொருளாளர், பொருளாளரின் பணிகளில் அவருடன் இணைந்து செயல்பட வேண்டும்.

4.16. தேசிய இளைஞர் அமைப்பாளர், பொதுச் செயலாளரின் அனுமதியுடன் தேசிய இளைஞர் விவகாரங்கள் தொடர்பான கட்சியின் அரசியல் செயல்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

4.17. கொள்கை பிரசாரச் செயலாளர், பொதுச் செயலாளரின் அனுமதியுடன் கட்சியின் செய்தி மற்றும் கொள்கைகளை நாட்டின் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்.

4.18. தேசிய அமைப்பாளர், கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் ஒருங்கிணைப்பதற்கான பொறுப்பை வகிப்பார்.

4.19. துணை தேசிய அமைப்பாளர், தேசிய அமைப்பாளருக்கு உதவ வேண்டும்.

4.20. பெண்கள் விவகார ஒருங்கிணைப்பாளர், தலைவரின் அனுமதியுடன் பெண்கள் விவகாரங்கள் தொடர்பான கட்சியின் அரசியல் செயல்பாடுகளை நிறைவேற்ற வேண்டும்.

4.21. பெண்கள் விவகார உதவி ஒருங்கிணைப்பாளர், பெண்கள் விவகார ஒருங்கிணைப்பாளருடன் இணைந்து செயல்பட வேண்டும்.

## 5. அத்தியாயம் 05: தலைவரை நியமித்தல் மற்றும் நீக்குதல்

5.1. தலைவரது தன்னிச்சையான ராஜினாமா, மரணம், பொதுச் செயலாளர் மூலம் நீக்கம், அல்லது தலைவர் மனநிலையிழந்து செயல்பட முடியாத நிலை போன்றவற்றால் பதவி வெற்றிடமானால் ஆனால், புதிய தலைவர் தேர்வு செய்யப்படும் வரையிலும் பொதுச் செயலாளர் அல்லது பொதுச் செயலாளர் எழுத்து வடிவில் அனுமதி வழங்கும் அலுவலர் பேரவையின் பிரதிநிதி அல்லது உதவி தலைவர், தலைவரின் தேர்தலுக்கான அலுவலர் பேரவை கூட்டத்தை நடத்துவதற்காக மட்டுமே பதவியை வகிக்கலாம் இதற்கு அப்பாற்பட்ட எந்த நோக்கத்திற்கும் அல்ல. இவ்வாறு நியமிக்கப்படும் தலைவர், முன்னாள் தலைவர் பதவி காலியான நாளில் இருந்து ஒரு மாதத்திற்குள் அலுவலர் பேரவையின் கூட்டத்தை கூட்ட வேண்டும். அலுவலர் சபையின் மொத்த உறுப்பினர்களின் 50%-தை விட அதிகமான வாக்குகளால், கலந்து கொள்ளாத உறுப்பினர்களையும் சேர்த்தே, அதில் பொதுச் செயலாளரின் வாக்கும் அடங்குமாறு, புதிய தலைவரை அலுவலர் சபைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தற்போதைய பொதுச் செயலாளர் அந்த நியமனத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல் எந்த ஒருவரும் தலைவராக நியமிக்கப்பட முடியாது.



24 DEC 2025
Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

5.2. தலைவரைத் தேர்வுசெய்வதில், அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்வரும் அம்சங்கள் உள்ளிட்டவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்: தலைவர் சமுதாயத்தை பராமரிக்கும் நற்பண்பு உடையவராகவும், நாட்டின் மதக் கட்டமைப்பு, அரசியல், அரசியலமைப்பு, அரசியல் கட்சிகளின் வரலாறு ஆகியவற்றை அறிந்தவராகவும், அரசியலின் நல்ல புரிதல் கொண்டவராகவும், நற்குணத்துடன் நடப்பவராகவும் இருக்க வேண்டும்.

5.3. நாடாளுமன்ற தேசிய பட்டியல் அல்லது உள்ளாட்சி அரச அமைப்பில் கட்சி ஒரு இடத்தைப் பெற்றால், அத்தகைய பதவிக்கு கட்சி பரிந்துரைக்கும் நபருக்கு பொதுச் செயலாளரின் அங்கீகாரம் அவசியமாகும்.

5.4. தலைவர் தன்கையெழுத்தில் எழுதிய ராஜினாமா அறிவிப்பை வழங்கி ராஜினாமா செய்யலாம். அதன் பின்னர் ஒரு மாதத்தினுள் இந்த அத்தியாயத்தின் 5.1 ஆம் விதிப்படி புதிய தலைவரைத் தேர்வு செய்ய வேண்டும்.

5.5. தலைவரை எந்த முன் அறிவிப்பும் இன்றி, பொதுச் செயலாளர் உடனடியாக நீக்கலாம், மேலும் மொத்த அலுவலர் சபை உறுப்பினர்களில் 50%-தை விட அதிகமானோர் (பொதுச் செயலாளரின் வாக்கையும் சேர்த்து) நீக்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தால், அந்த நீக்கம் நடைமுறைக்கு வரும்.

5.6. அலுவலர் சபையின் வாக்குகள் என்பது, கலந்து கொள்ளாதவர்களையும் சேர்த்து, சபையின் அனைத்து உறுப்பினர்களின் வாக்குகளையும் குறிக்கும். அவர்களின் சம்மதம்/வாக்கு சுற்றறிக்கையின் மூலம் பெறப்படும். அனைத்து உறுப்பினர்களும் தங்கள் விருப்பங்களின் கீழ் கையொப்பமிட வேண்டும்.

6.அத்தியாயம் 06: குழுக்கள்

6.1.கட்சியின் நோக்கங்கள் மற்றும் திட்டங்களை திறம்பட நிறைவேற்றுவதற்காக, தேவைக்கு ஏற்ப பல்வேறு குழுக்கள் அல்லது பிரிவுகள் அமைக்கப்படலாம். இக்குழுக்களில் மாற்றங்கள் செய்யப்படுவது, யாப்பில் எந்த மாற்றமும் இல்லாமல், அலுவலர் சபையின் 50%-தை விட அதிகமான வாக்குகளின் ஒப்புதலுடன் மட்டுமே அமுலுக்கு வரும்:

6.1.1. அரசியல் நடவடிக்கைகளுக்கான குழு
6.1.2. மத மற்றும் கலாச்சார விவகாரங்களுக்கான குழு
6.1.3. கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான குழு
6.1.4. மகளிர் விவகாரங்களுக்கான குழு
6.1.5. நிலம், சொத்து, விவசாயம் மற்றும் மீன்பிடி வளங்களுக்கான குழு
6.1.6. வர்த்தகம் மற்றும் தொழில் தொடர்பான குழு
6.1.7. அறிவுத்திறன் சார்ந்த விவகாரங்களுக்கான குழு
6.1.8. இளைஞர் விவகாரங்களுக்கான குழு



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

6.2. வேலைக்குழு

6.2.1. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும்/வாக்கு பிரிவிலும் செயல்படலாம்.

6.2.2. ஒரு மாவட்டத்திற்கு ஒரு வேலைக்குழு மற்றும் ஒரு வாக்கு பிரிவிற்கு ஒரு வேலைக்குழு மட்டும் இருக்கும்.

6.2.3. எந்த நபரும் மாவட்டம் அல்லது வாக்குப் பிரிவின் வேலைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட முடியாது. கட்சியின் பொதுச் செயலாளர் இவற்றிற்குப் பொறுப்பான தலைவராக கருதப்படுவார்.

6.2.4. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அல்லது பகுதி ஒருங்கிணைப்பாளர், வேலைக்குழுவின் செயலாளர் அல்லது இணைத் தலைவராக செயல்படலாம்.

6.2.5. அந்த வேலைக்குழுவில் சேர்ந்துள்ள அனைத்து ஒருங்கிணைப்பாளர்களும் அதன் உறுப்பினர்களாக இருக்கலாம். கட்சியில் பொதுவாக உறுப்பினராக சேராதவர்களுக்கு வேலைக்குழுவில் இடமில்லை.

6.2.6. வேலைக்குழு எப்போது வேண்டுமானாலும் கூடலாம். அதன் இணைத் தலைவர் அல்லது செயலாளர் கூட்டத்தின் விவரங்கள், நிகழ்வின் புகைப்படங்கள் மற்றும் பரிசீலிக்கப்பட்ட விஷயங்களை அஞ்சல் அல்லது மின்னஞ்சல் தொடர்பு மூலம் கட்சி தலைமைக்கு அனுப்ப வேண்டும்.

6.2.7. இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து கூட்டம் நடத்தாத பட்ச்சத்தில் வேலைக்குழு செயலற்றதாகக் கருதப்படும். மீண்டும் கூட விரும்பினால், சரியான காரணங்களைச் சமர்ப்பித்து, தலைவர் அல்லது செயலாளரின் அனுமதி பெற்று மீண்டும் கூடலாம்.

6.2.8. கூட்டத்தில் பங்கேற்றவர்களின் பதிவேட்டை செயலாளர் சரியாக பராமரித்து கட்சி தலைமையிடம் அனுப்ப வேண்டும்.

6.2.9. இவர்கள் கட்சியின் அலுவலர் சபையின் பகுதியாகக் கருதப்படமாட்டார்கள், ஆனால் நிர்வாக ஒத்துழைப்பை வழங்குவார்கள். எதிர்காலத்தில் அலுவலர் சபைக்குத் தேர்வு செய்யப்படும் வாய்ப்பு இவர்களுக்கு இருகின்றது.

அத்தியாயம் 07: கட்சியின் பொதுஉறுப்பினர்

7.1. இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் வசிக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட, கட்சியின் யாப்பு மற்றும் கொள்கைகளை ஏற்கும் யாரும் கட்சியின் உறுப்பினராகலாம். அவர் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட மற்றொரு அரசியல் கட்சியின் நிர்வாக உறுப்பினராக இருந்தால், அவர் அந்தக் கட்சிக்கு அளித்த ராஜினாமா கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும் ஆனால் பொதுச் செயலாளரின் அனுமதி மற்றும் சம்மதத்துடன், இணைப்பட்ட அரசியல் கட்சியின் உறுப்பினராக இருப்பதற்கான நிபந்தனை விதிவிலக்காகும். கட்சியுடன் கூட்டணியாக இருந்து இந்தக் கட்சியின் பெயரில் தேர்தலில் போட்டியிடும் நிலையில், போட்டியிடுபவர்கள் முதலில் இக்கட்சியின் உறுப்பினராகி, கட்சியின் ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்கு உட்பட வேண்டும்.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

7.2. விண்ணப்பத்தை நிரப்பி, அலுவலர் சபை நிர்ணயிக்கும் ஆயுள்கால உறுப்பினர் கட்டணத்தை செலுத்திய பின் ஒருவர் ஆயுள்கால உறுப்பினராகிறார்.

7.3. உறுப்பினர்களை சேர்த்தல்

7.3.1. உறுப்பினர் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்வதன் மூலம் அல்லது மின்னஞ்சல் அல்லது Watsapp மூலம் விண்ணப்பிப்பதன் மூலம் மற்றும் அலுவலகத் தலைமைக்குழு தீர்மானிக்கும் உறுப்பினர் கட்டணத்தை செலுத்துவதன் மூலமும் ஒருவர் உறுப்பினராகலாம். பொதுச்செயலாளர் தனது கையொப்பத்துடன் உறுப்பினர் அட்டையில் ஒப்புதல் வழங்கிய பின் உறுப்பினர் சேர்க்கை நடைமுறைக்கு வரும்.

7.3.2. ஒரு உறுப்பினர் தனது சந்தாவை செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் அல்லது குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தனது உறுப்புரிமையை புதுப்பிக்க வேண்டும். அவ்வாறு புதுப்பிககப்படாவிடில் அவர் கட்சியின் உறுப்புரிமையை இழப்பார்.

7.3.3. தனது உறுப்புரிமையை இழந்த ஒருவர், அலுவலகத் தலைமைக்குழு நிர்ணயிக்கும் நியாயமான தொகையை கட்சிக்கு செலுத்தி மீண்டும் சேர்க்கப்படலாம்.

7.4. உறுப்பினர்களின் கடமைகள்

7.4.1. அனைத்து உறுப்பினர்களும் கட்சியின் அடிப்படை அரசியல் கொள்கைகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலும் பிரசாரம், வேலை, கல்வி மற்றும் சமூகச் செயல்பாடுகளில் முன்மாதிரியாகவும் முதன்மையாகவும் பங்காற்றவும் வேண்டும்.

7.4.2. அனைத்து உறுப்பினர்களும் தங்கள் மனச்சாட்சிப்படி நடக்க வேண்டும். சட்டங்கள், இரகசியங்கள், முடிவுகள் ஆகியவற்றை கடுமையாக பின்பற்றுவது, கட்சி வழங்கிய பணிகளை விரைவாக நிறைவேற்றுவது மற்றும் மேற்கூறியவற்றை ஏற்றுக்கொள்ளும் போது கட்சிக்குள் ஒற்றுமை மற்றும் கட்டுப்பாட்டை நிலைநிறுத்துவது அவர்களின் கடமையாகும்.

7.4.3. உறுப்பினர்கள் அனைத்து அரசியல், கட்சி கூட்டங்களிலும் மற்ற கட்சிகளுடன் கலந்து பேசுவதைத் தவிர்க்க வேண்டும் மேலும் கட்சியைப் பற்றிய தீய விவாதங்கள், கட்சியின் அனுமதியில்லாமல் சிறு குழுக்களை உருவாக்குதல், உறுப்பினர்களுக்கு எதிராக சூழ்ச்சி செய்வது ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் தன்னிறைவு பார்வையில் ஈடுபட வேண்டும். குறைகள், தவறுகள் இருந்தால் தைரியமாக தலைமையிடம் தெரிவிக்கலாம். எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் தவறுகளை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தி சரிசெய்யலாம். மக்களுடன் நெருங்கிய உறவை பராமரித்தல், கட்சியின் கொள்கைகளை அவர்களிடையே பரப்புதல், பிரச்சினைகளில் ஆலோசனை வழங்குதல், பொது



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY)
408/B, Maradana Road, Colombo - 10.
Sworn Translator
24 DEC 2025

மக்களின் நியாயமான நலன்களை பாதுகாத்தல் ஆகியவையும் உறுப்பினர்களின் கடமைகளாகும்.

7.4.4.தலைவரின் அல்லது செயலாளரின் ஒப்புதலுடன் வெளியிடப்படும் கட்சித் தீர்மானங்களை அனைத்து உறுப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த தீர்மானத்தை பொது மேடையில் விவாதிக்கக் கூடாது. தீர்மானத்தைப் பற்றி கருத்து வேறுபாடு உள்ளவர்களுக்கு தனிப்பட்ட முறையில் தலைவர் அல்லது செயலரிடம் தெரிவித்து விவாதிக்க உரிமை உள்ளது.

7.4.5. அனைத்து உறுப்பினர்களும் யாப்பை மதித்து பின்பற்ற வேண்டும். அதற்கு விரோதமாக நடப்போர் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர். ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஒழுக்காற்றுக் குழுவுக்கு உண்டு.

7.5. உறுப்பினர்களின் உரிமைகள்

7.5.1.ஒவ்வொரு உறுப்பினரும் கட்சியுடன் தொடர்புடைய ஆண்டு பொதுக்கூட்டங்களில் பங்கேற்கலாம்.

7.5.2. கட்சியின் செயல்பாடுகள் தொடர்பான கேள்விகள் விவாதிக்கப்படும் கூட்டங்களில் உறுப்பினர்கள் பங்கேற்கலாம்.

7.5.3.கட்சியின் செயல்பாடுகளைப் பற்றி எழுத்து மூலமாக ஆலோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை உறுப்பினர்கள் சமர்ப்பிக்கலாம்.

அத்தியாயம் 08: உறுப்பினர்களின் ஒழுங்கு தொடர்பான விடயங்கள்

8.1. அலுவலகத் தலைமைக்குழு உறுப்பினர்களும், கட்சியின் பொது உறுப்பினர்களும் பின்பற்ற வேண்டிய ஒழுக்கக் கோட்பாடுகள் பின்வருமாறு:

8.1.1. உறுப்பினர்கள் கட்சிக்கு தீங்கும் அவப்பெயரும் ஏற்படுத்தும் விதமாக நடக்கக் கூடாது.

8.1.2. கட்சியின் நடத்தை குறித்து ஊடகங்களில், சமூக ஊடகங்களில் அல்லது பொது இடங்களில், பொதுச் செயலாளரிடம் முதலில் எழுத்து மூலமாக தெரிவிக்காமல் விமர்சிக்கக் கூடாது. கட்சியின் நடத்தை குறித்து குறைபாடுகள் இருப்பின், அவை பொதுச்செயலாளர் அல்லது நிர்வாகத்திடம் எழுத்து மூலமாக தெரிவிக்கலாம்.

8.1.3. உறுப்பினர் நேர்மையும் ஒழுக்கத்துடன் நடக்க வேண்டும்.

8.1.4. எந்த இனம், மதம் அல்லது கலாசாரத்தையும் அவமதிக்கும் வகையில் உறுப்பினர் நடக்கக் கூடாது.

8.1.5. மோசடி, திருட்டு, ஏமாற்றுதல் அல்லது குற்றவியல் முறைகேடுகள் போன்ற தவறான அல்லது மோசடி செயல்களில் உறுப்பினர் ஈடுபடக் கூடாது.

8.1.6. கட்சியின் நடவடிக்கைகள் குறித்து ஏதேனும் அதிருப்தி ஏற்பட்டால் முதலில் தலைவர் மற்றும் பொதுச்செயலாளரிடம் எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

8.1.7. கட்சியைப் பற்றிய எந்த அறிக்கை வெளியிடப்பட வேண்டுமாயின் அது பொதுச்செயலாளரிடம் அனுப்பி, வெளியிட அனுமதி பெறப்பட வேண்டும்.

8.1.8. கட்சியின் கொள்கைக்கு எதிராக சமூக ஊடகங்களில் எழுதுதல் அல்லது கட்சியுடன் தொடர்பில்லாத கட்சிகளுக்காக எழுதுதல் தவிர்க்கப்பட வேண்டும். கட்சி வேறு கட்சியுடன் ஒப்பந்தத்தில் இணைந்திருந்தால், அந்த கட்சிக்கு எதிராக கருத்துரைப்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

8.1.9. கட்சி அரச தரப்பில் இணைந்திருந்தால், எதிர்க்கட்சிகளுடன் அரசியல் தொடர்புகள் வைத்தல், அவர்களுக்கு ஆதரவாக கருத்துரைத்தல், அரசியல் நிகழ்வுகளில் அவர்கள் உடன் புகைப்படம் எடுத்து வெளியிடுதல் ஆகியவற்றை தவிர்க்க வேண்டும். அதேபோல கட்சி எதிர்க்கட்சியில் இருந்தால், ஆளும்கட்சியுடன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தவிர்க்கப்பட வேண்டும்.

8.1.10. கட்சியின் வாயிலாக மக்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் கட்சியை மாற்றுதல் அல்லது பொது மேடையில் கட்சி அல்லது கட்சி உறுப்பினர்களைப் பற்றிய கருத்துரைத்தல் குற்றமாகும்.

8.1.11. கட்சிக்கு எதிராக பேசுவதற்காக உறுப்பினர்கள் கூட்டங்கள் நடத்துதல், ஒன்றுகூடலை ஏற்படுத்துதல், பேஸ்புக் அல்லது வாட்ஸ்அப் குழுக்களை அல்லது பிற டிஜிட்டல் தளங்களை பொதுச்செயலாளருக்கு தெரியாமல தொடங்குதல் குற்றமாகும்.

8.1.12. இந்தக் கட்சி தனது பெயர் மற்றும் சின்னத்தின் கீழ் தேர்தலில் போட்டியிடும் போது, போட்டியிடும் உறுப்பினர்கள் கட்சியின் உறுப்பினராக இருக்க வேண்டும் மேலும் அவர்கள் தேர்தலுக்கு முன் அல்லது பின் மற்றொரு கட்சியில் சேருவாரெனின் தேர்தலின்போது உறுப்பினர், கட்சியிலிருந்து நீக்கப்படுவதைத் தொடர்ந்து, அவர் பாராளுமன்றம் அல்லது பிற அமைப்பில் தமது இருக்கையை இழக்க வேண்டியதாகும்.

8.2. ஒழுக்காற்று நடவடிக்கை

8.2.1. கட்சியின் யாப்புக்கு எதிராக நடந்து கொண்டால், அல்லது கட்சிக்கு அவப்பெயர் மற்றும் மரியாதைக்குறைவை ஏற்படுத்தினால், அல்லது கட்சியின் ஒழுக்காற்று விதிகளை மீறினால், அல்லது தீவிரவாதம் அல்லது பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டில் சிக்கினால், அல்லது கட்சிச்சட்டங்களை மீறினால், பொதுச் செயலாளர், தேவையான சூழலில் தலைவருடன் ஆலோசனை செய்து, உடனடியாக அந்த உறுப்பினரின் உறுப்புரிமையை இடைநிறுத்தலாம்.

8.2.2. அதேபோல், எந்த உறுப்பினரும், ஏற்றுக்கொள்ளத்தக்க காரணமின்றி தொடர்ந்து இரண்டு (2) ஆண்டுகள் கட்சியின் ஆண்டு மாநாட்டில் பங்கேற்காமல் இருந்தால், அல்லது தலைமை அலுவலகத்தில் எழுத்து மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் உறுப்புரிமையை புதுப்பிக்கத்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator

24 DEC 2025

தவறினால், அவர்/அவள் தனது சொந்த முடிவினால் உறுப்பினராக இருந்து விலகியதாகக் கருதப்படுவார்.

8.2.3. ஒருங்கிணைப்பாளர்கள் தங்களது கடமையை தொடர்ந்து 6 மாதங்கள் நிறைவேற்றாமல் இருந்தால், அல்லது கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுக்காமல் இருந்தால், அவர்கள் தாங்களாகவே தங்கள் பதவியிலிருந்தும், கட்சியின் உறுப்புரிமையிலிருந்தும் விலகியவர்களாகக் கருதப்படுவார்கள்.

8.2.4. உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டவர் மீண்டும் சேர விரும்பினால், பொதுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். பொதுச் செயலாளரைச் சேர்த்து அலுவலர்கள் சபை உறுப்பினர்களில் 50% மேற்பட்டோரின் ஒப்புதலுடன் அவர் மீண்டும் சேர்க்கப்படுவார்.

8.3. ஒழுக்காற்று நடவடிக்கை நடைமுறை

8.3.1. இந்த அரசியலமைப்பின் எந்த விதியையும் மீறியதற்கான குற்றச்சாட்டு அல்லது கட்சிக்கு கேடு அல்லது அவப்பெயர் விளைவிக்கும் நடத்தை, அல்லது தலைமைக்கான கட்டளைகளையும் அலுவலர்கள் சபை முடிவுகளையும் மீறியதற்காக எந்த உறுப்பினரும் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்.

8.3.2. ஒழுக்காற்று விசாரணை கட்சியின் ஒழுக்காற்று குழுவால் நடத்தப்படும். ஒழுக்காற்று குழுவின் பரிந்துரைகள் அலுவலர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, 50% மேற்பட்டோரின் ஒப்புதல் பெறப்படும்.

8.3.3. இடைநீக்கம் ஒரே நேரத்தில் அதிகபட்சம் 21 நாட்கள் இருக்கும். இந்த காலப்பகுதியில், இடைநீக்கம் செய்யப்பட்ட நபர் பதிவு அஞ்சல் மூலம் தலைவருக்கு அல்லது பொதுச் செயலாளருக்கு மேல்முறையீடு செய்யலாம். இல்லையெனில், அவர்/அவள் அதை ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படும்.

8.3.4. பொதுச் செயலாளரைச் சேர்த்து அலுவலர்கள் சபையில் 50% மேற்பட்டோர் ஒப்புதல் அளித்தால், தலைவர் அல்லது பொதுச் செயலாளர் அல்லாத எந்த உறுப்பினரும் எப்போது வேண்டுமானாலும் கட்சியிலிருந்து நீக்கப்படலாம்.

8.3.5. ஒழுக்காற்று நடவடிக்கைக்குட்பட்ட எந்த நபருக்கும் எழுத்து மூலம் அல்லது மின்னஞ்சல் அல்லது குரல் பதிவு போன்ற மின்னணு முறையில் குறைந்தது 7 நாட்களுக்குள் அறிவிப்பு வழங்கப்படும். குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க அவருக்கு நியாயமான வாய்ப்பு வழங்கப்படும்.

8.3.6. உறுப்பினர் அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் ஒழுக்காற்று விசாரணைகள் முடிக்கப்பட வேண்டும்.

8.3.7. பொதுச் செயலாளர் அறிவிக்காத எந்த தீர்ப்பையும் வேறு உறுப்பினர்கள் தாமாக அறிவிக்கவோ, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவோ முடியாது.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY)
408/B,
Maradana Road,
Colombo - 10.
Sworn Translator

24 DEC 2025

8.3.8. ஆனால் அவசர சூழ்நிலைகளில், பொதுச் செயலாளர் முன் அறிவிப்பின்றி கட்சிக்கெதிராக நடக்கும் உறுப்பினரை நீக்கலாம். ஆனால் அடுத்த அலுவலர்கள் சபை கூட்டத்தில் இது குறித்து அவருக்கு கட்டாயமாக அறிவித்து, பொதுச் செயலாளரைச் சேர்த்து முழு அலுவலர்கள் சபையின் 50% மேற்பட்டோரின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

8.4. ஒழுக்காற்று குழு

8.4.1. பொதுச் செயலாளர் 3 முதல் 5 பேர் வரை அலுவலர்கள் சபை உறுப்பினர்களில் இருந்து ஒருவரையொருவர் தேர்வு செய்து ஒழுக்காற்று குழுவை நியமிப்பார்.

8.4.2. ஒழுங்குக் குழுவின் அறிக்கைகள் விசாரணை முடிந்த 7 நாட்களுக்குள் அலுவலர்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8.4.3. ஒழுக்காற்று குழுவின் அறிக்கை கிடைத்த பின், அலுவலர்கள் சபை உறுப்பினர்களின் 50% மேற்பட்டோர் ஒப்புதல் அளித்தால், அந்த உறுப்பினர் நீக்கப்படவோ அல்லது குறிப்பிட்ட காலத்திற்கு இடைநீக்கம் செய்யப்படவோ முடியும்.

அத்தியாயம் 9: கட்சியின் பொதுச் செயலாளர் தேர்வு மற்றும் நீக்கம்

9.1. பொதுச் செயலாளரின் பதவி நீக்கம், தன்னார்வ விலகல், மரணம் அல்லது வேறு காரணங்களால் வெற்றிடமானால், அல்லது பொதுச் செயலாளர் செயல்பட முடியாத நிலைக்கு வந்தால் மனநிலை பாதிக்கப்படும் நிலையில் இருந்தாலோ, அல்லது அவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ, புதிய பொதுச் செயலாளர் தேர்ந்தெடுக்கப்படும் வரை, அலுவலர் குழுவிலிருந்து உதவிச் செயலாளர், பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்துவதற்காக மட்டும், அலுவலர் குழுக் கூட்டத்தை நடத்தும் நோக்கத்திற்காக அந்தப் பதவியை வகிப்பார். அவ்வாறு நியமிக்கப்பட்ட பொதுச் செயலாளர், பதவி வெற்றிடமான நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் அலுவலர் குழுக்கூட்டத்தை கூட்ட வேண்டும். அடுத்து, அலுவலர் குழு, வருகை புரியாதவர்களையும் சேர்த்து, மொத்த அலுவலர் குழு உறுப்பினர்களின் 50%ற்கு மேற்பட்ட வாக்குகளால் புதிய பொதுச் செயலாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

9.2. பொதுச் செயலாளரை ஒழுங்கு நடவடிக்கைகளின் அடிப்படையில் மட்டுமே பதவியில் இருந்து நீக்க முடியும் மேலும், வருகை புரியாதவர்களையும் சேர்த்து, மொத்த அலுவலர் குழு உறுப்பினர்களின் 50% மேற்பட்ட வாக்குகள் கிடைத்தால் மட்டுமே அந்த நீக்கம் அமுலுக்கு வரும்.

9.3. அலுவலர் குழுவின் வாக்கெடுப்பு என்பது குழு உறுப்பினர்களின் அனைவரின் வாக்குகளையும் உள்ளடக்கியதாக இருக்கும். உறுப்பினர்கள் வராதபட்சத்தில், அவர்களுக்கான வாக்கு/விருப்பம் சுற்றறிக்கையாகப் பெறப்பட வேண்டும். அனைத்து உறுப்பினர்களும் தாங்கள் விருப்பத்தின் பிரகாரம் கீழ் கையொப்பமிட வேண்டும்.



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator

24 DEC 2025

10.அத்தியாயம் 10: பிற அலுவலர்களின் நியமனமும் நீக்கமும்

10.1. அலுவலர்கள் நியமனம் – தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் தவிர, மற்ற அனைத்து அலுவலர் குழு உறுப்பினர்களும் பொதுச் செயலாளரால், நியமிக்கப்படுவர். பொதுச் செயலாளர், வருகை புரியாதவர்களையும் சேர்த்து, மொத்த அலுவலர் குழு உறுப்பினர்களின் 50% மேற்பட்ட அங்கீகாரத்துடன் உடனடி விளைவுடன் யாரையும் அலுவலர் குழுவிற்கு நியமிக்கலாம்.

10.2. அலுவலர்கள் நீக்கம் – தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் தவிர, அலுவலர் குழு உறுப்பினர்களை பொதுச் செயலாளர் நீக்கலாம். இது, வருகை புரியாதவர்களையும் சேர்த்து, மொத்த அலுவலர் குழு உறுப்பினர்களின் 50%ற்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தால் மட்டுமே உடனடியாக அமலுக்கு வரும்.

10.3. இந்த யாப்பின் பிரிவு 4.1க்கு உட்பட்டு, அலுவலர் குழு உறுப்பினர்கள் 25 பேராகவே இருக்கும்.

11. அத்தியாயம் 11: தேர்தல்களில் போட்டியிடுதல்

11.1. கட்சி அனைத்து தேர்தல்களிலும் போட்டியிடலாம்.

11.2. கட்சி தனது சொந்த சின்னத்தைப் பயன்படுத்தி அல்லது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பிற கட்சி/கட்சிகளுடன் இணைந்து எழுத்து வடிவ ஒப்பந்தத்துடன் போட்டியிடலாம்.

11.3. கட்சியின் உறுப்பினர் ஒருவர் கூட்டணியாக வேறு கட்சியுடன் போட்டியிட்டு வென்றாலும், அவர் இக்கட்சியின் உறுப்பினராகவே செயல்பட வேண்டும். மற்ற கட்சிக்கு அவரை கட்டுப்படுத்த அதிகாரம் இல்லை அவர் இக்கட்சியின் விதிமுறைகளுக்கு உட்படுவார்.

11.4. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர், அலுவலர் குழுவின் அனுமதி இன்றி தனது கட்சியை மாற்றினாலோ, அல்லது வேறு கட்சியில் இணைந்தாலோ, அல்லது ஒழுங்கு மீறினாலோ, அல்லது பொதுச் செயலாளரின் உத்தரவுக்கு முரணாகச் செயல்பட்டாலோ, பொதுச் செயலாளர் அவரை உறுப்பினர் பதவியிலும் பதவி பிரதிநிதித்துவத்திலிருந்தும் நீக்கி, அவருக்கு மாற்றாக வேறு ஒருவரை நியமிக்கும் முழு அதிகாரம் பெற்றிருப்பர்.

11.5. கட்சியின் ஆதரவுடன் வெற்றி பெற்ற உறுப்பினர், தனது திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது அலுவலர் குழுவின் முக்கிய உறுப்பினர்களின் ஆலோசனையைப் பெற வேண்டும். மேலும், அவரது பகுதியிலுள்ள கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்கு திட்டங்களில் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

12. அத்தியாயம் 12: கட்சிக்கான நிதி

12.1. நிதி திரட்டல் – உறுப்பினர் சந்தா கட்டணம், கட்சி உறுப்பினர்களின் அன்பளிப்புகள், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நன்கொடைகள் ஆகியவற்றின்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator
24 DEC 2025

மூலம் கட்சியின் நிதி திரட்டப்படும். இலங்கை அரசால் தடைசெய்யப்பட்ட உள்ளூர்/வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்து நன்கொடை பெறப்படாது.

12.2. கட்சியின் வங்கி கணக்கு – கட்சியின் பெயரில் வங்கி கணக்கு திறக்கப்படும். அலுவலர் குழு வேறு விதமாக முடிவு செய்யாத வரை, பொதுச் செயலாளர் மட்டுமே கையொப்ப அதிகாரி ஆவார்.

12.3. செலவுகள் – பொதுச் செயலாளர் ஒப்புதல் வழங்கிய பின் மட்டுமே செலவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12.4. பெறப்படும் மொத்த நிதியும், மூன்று நாட்களுக்கு மேல் தனிப்பட்ட முறையில் வைத்திருக்கக்கூடாது வங்கி கணக்கில் வைப்பிடல் வேண்டும்.

12.5. பொருளாளர் சிறு செலவுகளுக்காக சிறிய தொகையை வைத்திருக்கலாம்.

12.6. கட்சி சொத்துக்கள் - கட்சியின் சொத்துக்கள் எல்லாம் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகியோரைக் கொண்ட நம்பிக்கையாளர் குழுவின் பெயரில் பதியப்பட்டு, அக்குழுவின் பாதுகாப்பில் வைக்கப்பட வேண்டும்.

12.7 அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மாற்றப்படும் ஆவணங்கள யாவையும் நம்பிக்கையாளர் குழுவின் பெயரிலேலே பதியப்பட வேண்டும்,

12.8 நம்பிக்கையாளர் குழுவைச் சார்ந்த நிருவாக சபை உறுப்பினர்களோ அல்லது அவர்களின் பின் இப்பதவிகளை வகுப்பவர்களோ கட்சியின் சொத்துக்களை கட்சியின் நம்பிக்கையாளர்களாக மட்டுமே மேற்படி சொத்துக்களின் உரிமையைக் கொண்டிருப்பர். அப்படிப்பட்ட உரிமங்கள் எல்லாம், காலத்துக்குக்காலம், குறிக்கப்பட்ட நிர்வாகசபை பொறுப்பை உள்ளடக்கியவர்களிடம் மாற்றப்படும்.

12.9.நிர்வாக சபையின் பரிந்துரையின்படி, நம்பிக்கையாளர் குழுவினால் மேற்படி சொத்துக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களை கையாள்வதும் விற்பதுவும் சட்டப்படி சரியானதாகக் கருதப்படும்.

12.10 கட்சியின் பெயரில் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்குரிய உரிமை சட்டப்படி நம்பிக்கையாளர் குழுவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட வங்கிக்கணக்குகள் பொதுச்செயலாளருடன், தலைவர் அல்லது பொருளாளரினால் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட வேண்டும்



Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY) 408/B, Maradana Road, Colombo - 10. Sworn Translator

24 DEC 2025

13. அத்தியாயம் 13: யாப்பின் மொழி மற்றும் திருத்தங்கள்

13.1. முரண்பாடுகள் இருந்தால், இந்த அரசியலமைப்பின் ஆங்கில பதிப்பே மேலோங்கும்.

13.2. அரசியலமைப்பை மாற்ற அல்லது திருத்துவதற்கான அதிகாரம் அலுவலர் குழுவிற்கே உடையது.

13.3. அலுவலர் குழு புதிய அரசியலமைப்பை ஏற்கவும், பல மொழிகளில் மொழிபெயர்ப்புகளை வழங்கவும் முழு அதிகாரம் பெற்றுள்ளது.

13.4. திருத்தங்கள் வருகை புரியாதவர்களையும் சேர்த்து, மொத்த அலுவலர் குழு உறுப்பினர்களின் 50%ற்கு மேற்பட்ட வாக்குகளால் அமுலுக்கு வரும்.

13.5. பொதுச் செயலாளர் ஒப்புதல் அளிக்காமல் எந்தத் திருத்தமும் செல்லுபடியாகாது.

சின்னம், பெயர், முகவரி ஆகியவை 11 செப்டம்பர் 2024 அன்று அலுவலர் குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறு யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

கையொப்பம்

ஜி.ரி, ஜெயசீலன்
பொதுச் செயலாளர்
ஐக்கிய ஜனநாயகக் குரல்

பொதுச் செயலாளர்
ஐக்கிய ஜனநாயகக் குரல்
இல.20. Dr. N.M.பெரேரா மாவத்த
கொழும்பு-08

24 DEC 2025

Y. L. MUJEEBUR RAHMAN B.A. (CEY)
408/B,
Maradana Road,
Colombo - 10.
Sworn Translator

24 DEC 2025